வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

நாள்: 19.07.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

வரவிருக்கும் மன் கீ பாத் நிகழ்ச்சிக்கு பொது மக்களிடம் இருந்து பல்வேறு உள்ளீடுகள் பெறப்பட்டு வருவது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

விவசாயத்தில், ரசாயன உரங்களின் பயன்பாடு இன்றியே, மகசூலை அதிகரிக்க முடியும் என்று, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.

முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில் முக்கிய உந்து சக்திகளில் ஒன்றாக விளையாட்டுத் துறை திகழும் என்று, மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

தமிழகத்தில் ரயில்வே மற்றும் விமான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த, மத்திய அரசு, 6 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கி இருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

------------------------------

*மன் கீ பாத்* (13)

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 28ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை அகில இந்தியா வானொலியின் மன் கீ பாத் நிகழ்ச்சி மூலம், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்கிறார். பிரதமரின் இந்த 112ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி, அன்றைய

தினம் காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலை வரிசைகளிலும் ஒலிபரப்பாகும். இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய கருத்துக்கள் குறித்து, பொது மக்களிடம் இருந்து பல்வேறு ஆலோசனைகள் பெறப்பட்டு வருவது குறித்து, பிரதமர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார். குறிப்பாக இளைஞர்களிடம் இருந்து, சமூக மாற்றத்திற்கான உள்ளீடுகள், அதிக அளவில் பெறப்படுவதாக பிரதமர் தெரிவித்துள்ளார். மைகவ் இணைய தளம், நமோ செயலி, மற்றும், 1800-11-7800 என்ற தொலைபேசி எண்ணில் பொது மக்கள் தொடர்ந்து கருத்துக்களை அனுப்பலாம் என்றும், பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

------------------------------

மோடி – வாழ்த்து (6)

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள திருமதி உர்சுலா வான்-டெர் லெயேனுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, வாழ்த்து தெரிவித்துள்ளார். உலக நன்மைக்காக இந்தியாவிற்கும்-ஐரோப்பிய யூனியனுக்கும் இடையிலான கூட்டாண்மை உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில், திருமதி உர்சுலாவுடன் இணைந்து செயல்பட தாம் ஆர்வம் கொண்டுள்ளதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

------------------------------

மோடி-சந்திப்பு (7)

விண்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்தித் துறை தொடர்பான இந்தோ-அமெரிக்க ஒத்துழைப்பில், முக்கிய கூட்டாளியாக திகழும் **லாக்ஹீட் மார்ட்டின்** நிறுவனத்தின் திரு. **ஜிம் டாய்க்லெட்**, புதுடெல்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து பேசினார். இந்தியாவில் தயாரிப்போம்-உலகிற்காக தயாரிப்போம் என்னும் இலக்கை எட்டுவதில், முக்கிய பாதுகாப்பு உற்பத்தி நிறுவனமான **லாக்ஹீட் மார்ட்டின் நிறுவனம்** காட்டி வரும் உறுதிப்பாடு பாராட்டத்தக்கது என்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார்.

------------------------------

விவசாயம் 1 (18)

விவசாயத்தில், ரசாயன உரங்களின் பயன்பாடு இன்றியே, மகசூலை அதிகரிக்க முடியும் என்று, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார். இன்று லக்னோவில், இயற்கை விவசாயம் பற்றிய பிராந்திய ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், இயற்கை விவசாயத்தில், முதல் 2 ஆண்டுகள் வரைதான் மகசூல் குறையும் என்றும், இதை சரிகட்ட அரசு முதல் 3 ஆண்டுகளுக்கு மானியம் வழங்கும் என்றும் கூறினார். இயற்கை வேளாண் விளை பொருட்களுக்கு அரசு சான்றிதழ் வழங்கும் என்றும், இதன்மூலம் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க ஏதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார். ரசாயன உரங்களின் பயன்பாட்டை தவிர்ப்பதால், விவசாயிகளின் சாகுபடிச் செலவு குறைவதுடன், நுகர்வோர் ஆரோக்கியமும் மேம்படும் என்பதால், விவசாயிகள் அதிக அளவில்,

இயற்கை விவசாயத்தில் ஈடுபட வேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டார். இயற்கை விவசாயம் குறித்து அகில இந்திய அளவிலான விழிப்புணர்வு பிரச்சாரங்களை அரசு தொடக்கும் என்றும் அவர் தெரிவித்தார். குஜராத் மாநில ஆளுநர் ஆச்சார்யா. தேவ விரத் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், இயற்கை விவசாயத்தால், பாசன நீரின் தேவையும் குறையும் என்றார். உத்தரபிரதேசத்தில், இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க, மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக, முதலமைச்சர் யோகி.

விவசாயம் 2 (4)
ஆதித்யநாத் தெரிவித்தார். வேளாண் விளை பொருட்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கான ஆய்வுக்கூட வசதிகளை மேம்படுத்துமாறு, மாநிலத்தின் அனைத்து 6 வேளாண் பல்கலைக் கழகங்களுக்கும், அரசு அறிவுறுத்தி இருப்பதாக, அவர் தெரிவித்தார்.

------------------------------

முருகன் (12)
தூத்துக்குடி-மேட்டுப்பாளையம் இடையே, புதிய, வாரம் இருமுறை எக்ஸ்பிரஸ், கடலூர் துறைமுகம் வரை நீட்டிக்கப்பட்ட மைசூர்-மயிலாடுதுறை எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட ரயில் சேவைகளை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் இன்று , மேட்டுப்பாளையத்தில் இருந்து கொடியசைத்து தொடக்கி வைத்தார். கோவை-மேட்டுப்பாளையம் மெமு ரயிலை போத்தனூர் வரை நீட்டிக்கும் சேவையையும் அவர் தொடக்கி வைத்தார். நீலகிரி, மேட்டுப்பாளையம்

பகுதிகளை தமிழகத்தின் தென் மாவட்டங்களோடு இணைப்பதால், சுற்றுலா பயணிகள் பயன்பெறுவார்கள் என்று, டாக்டர் எல். முருகன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். தமிழகத்தில் ரயில்வே மற்றும் விமான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த, மத்திய அரசு 6 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

------------------------------

*ரயில் விபத்து* (8)

உத்தரபிரதேசத்தில் நேற்று கோண்டா ரயில் விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை, இன்று 4ஆக அதிகரித்து உள்ளது. மோசமாக காயமடைந்த மேலும் இருவர், மருத்துவமனையில் சிகிக்சை பெற்று வருகின்றனர். கோண்டா அருகே, சண்டிகர்-திப்ருகர் எக்ஸ்பிரஸ் ரயிலின் 21 பெட்டிகள் நேற்று பிற்பகல் தடம் புரண்டதில், மொத்தம் 30 பேர் காயமடைந்தனர். லக்னோ-குவஹாத்தி ரயில் பாதையில், போக்குவரத்தை சீர்படுத்தும் பணிகள், போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இந்த மார்க்கத்தில் செல்ல வேண்டிய ரயில்கள், வேறு பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளன.

------------------------------

*ஏவுகணை* (9)

போர் முறைகளில் ஏற்பட்டு வரும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக, விமானப் படையின் பொறுப்புகள் அதிகரித்து இருப்பதாக, இந்திய விமானப் படையின் தலைவர் ஏர் மார்ஷல் அமர் ப்ரீத் சிங் கூறியுள்ளார். இன்று

புதுடெல்லியில், வான் பாதுகாப்பு மற்றும் ஏவுகணை தொழில்நுட்பம் பற்றிய தேசிய கருத்தரங்கு மற்றும் கண்காட்சியை தொடக்கி வைத்து பேசிய அவர், பாதுகாப்புத் துறையில், தகவல் தொடர்பு மற்றும் தரவுகளுக்கும் முக்கிய இடம் இருப்பதாக கூறினார். பாதுகாப்புத் துறையில், சுயசார்பு நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், தரத்தின் மீது முக்கிய கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

------------------------------

*மாண்டவியா - கீர்த்தி* 1 (18)

வளரும் விளையாட்டுத் திறன்களை இனம் காண்பதற்கான மத்திய அரசின் 2ஆம் கட்ட **கேலோ இண்டியா- கீர்த்தி** திட்டத்தை, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். அதிநவீன தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களையும், விளையாட்டுத் திறன்களை இனம் காண்பதில் சர்வதேச அளவில் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகளையும் உள்ளடக்கி, கீர்த்தி திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

கிராமங்கள்- நகரங்கள் முதல், பழங்குடி பகுதிகள், மற்றும், இமயமலை பிராந்தியம் வரை, நாட்டின் எல்லா இடங்களில் இருந்தும், விளையாட்டுத் திறமைகள் இனம் காணப்படும் என்று, அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசின் முதல் 100 நாட்களில் மட்டும், திறமை வாய்ந்த 1

லட்சம் விளையாட்டு வீரர்கள் இனம் காணப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அடித்தட்டு நிலையில் விளையாட்டு திறமைகளை இனம் காண்பதற்கான எல்லா அம்சங்களும் அடங்கிய ஒரே தளமாக கீர்த்தி திட்டம் அமைவதாகவும் நடப்பு நிதியாண்டில், எல்லா மாநிலங்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, மொத்தம் 20 லட்சம் இளம் விளையாட்டு வீரர்களின் திறன்கள் மதிப்பீடு செய்யப்படும் என்றும்,மத்திய விளையாட்டுத் துறை

*மாண்டவியா – கீர்த்தி* 2 (4)

அமைச்சகம் தெரிவித்துள்ளது. முதல்கட்ட கீர்த்தி திட்டம் கடந்த மார்ச் 12ஆம் தேதி சண்டிகரில் தொடக்கப் பட்டதும், மாநிலத்தின் 70 மையங்களில் சுமார் 3 லட்சத்து 62 ஆயிரம் பேர் இத்திட்டத்திற்கு பதிவு பெற்று, 11 விதமான விளையாட்டுகளில் திறன் மதிப்பீடு செய்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

-------------------------------

*மாண்டவியா* (15)

2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில் முக்கிய உந்து சக்திகளில் ஒன்றாக விளையாட்டுத் துறை திகழும் என்று, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார். இந்தியாவில் ஒலிம்பிக் மற்றும் பேரா ஒலிம்பிக் வீரர்களை இன்று புதுடெல்லியில் சந்தித்து

கலந்துரையாடிய அவர், விளையாட்டுத் துறையில் உள்ளாற்றல் அதிகம் உள்ள பலதரப்பட்ட மக்களை கொண்ட நாடு இந்தியா என்றும், இவர்களுக்கு சரியான ஆதரவு மற்றும் வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில், நாட்டின் பதக்கக் கணக்கை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறினார். பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான இந்திய விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் குறித்த கையேடு ஒன்றையும் அமைச்சர் வெளியிட்டார். சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் இந்திய விளையாட்டு வீரர்களுக்கு அரசு வழங்கும் ஆதரவு குறித்து விளையாட்டு வீரர்கள் பலரும் பாராட்டு தெரிவித்தனர்.

------------------------------

*புதுச்சேரி-பட்டாசு (9)*

புதுச்சேரியில் தீபாவளி பண்டிகைக்கு பட்டாசு கடை வைக்க விரும்புவோர் அடுத்த மாதம் 14ஆம் தேதிக்குள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் அறிவித்துள்ளார். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன், பட்டாசுக் கடையின் வரைபடம், பட்டாசு கையிருப்பின் அளவு, கடையை சுற்றி உள்ள சாலைகள் மற்றும் இதர கடைகள் பற்றிய விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப் பட்டுள்ளது. வாடகை பத்திரம் அல்லது சொந்தக் கடையாக இருந்தால் அதற்கான ஆவணங்களை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------------

*வானிலை (17)*

வங்கக் கடலில் நேற்று உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, ஒடிசா மற்றும் வடக்கு ஆந்திர கடலோர பகுதிகளை ஒட்டி நிலவுகிறது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை அதிகாலை புரி அருகே, ஒடிசா கடற்கரையை கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, கடந்த 24 அதிகபட்சமாக, நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில், 5 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில், 1 செ.மீ மழை பெய்துள்ளது.

இன்றைய தினம், திருப்பூர், தேனி, மற்றும், திண்டுக்கல் மாவட்ட மலைப் பகுதிகளில் கனமழைக்கும், கோவை மாவட்ட மலைப் பகுதிகளில் மிக கனமழைக்கும், நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில், அதிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 25ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்ப்பார்க்கப் படுகிறது. மீனவர்கள், வடக்கு மற்றும் மத்திய வங்கக்கடல் மற்றும் ஆந்திர கடலோர பகுதிகளுக்கும், மன்னார் வளைகுடா மற்றும் தமிழக கடலோர பகுதிகளுக்கும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

------------------------------

*மைக்ரோ சாஃப்ட் (19)*

மைக்ரோ சாஃப்ட் மென்பொருள் சேவை செயலிழந்ததன் காரணமாக, உலகெங்கிலும் இதுதொடர்பான பல்வேறு சேவைகள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளன. வர்த்தக நிறுவனங்கள், பங்கு சேவைகள் மற்றும் சர்வதேச விமான சேவைகளில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தியாவில், இண்டிகோ, ஸ்பைஸ்ஜெட் உள்ளிட்ட விமான சேவை நிறுவனங்களின் செக் இன் கட்டமைப்பு பாதிக்கப் பட்டுள்ளது. மும்பை விமான நிலையத்திலும், டெல்லி விமான நிலையத்தின் 2ஆவது முனையத்திலும் இதன் தாக்கம் அதிகமாக இருந்தது. பிரச்சனை காரணமாக, அமெரிக்காவிலும், பல விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. ஜப்பான் மற்றும் நியூசிலாந்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த Crowd – Strike சைபர் பாதுகாப்பு நிறுவனத்தின் Falcon-Sensor மென்பொருள் நிறுவப்பட்ட வின்டோஸ் கணிப்பொறிகளில்தான் பிரச்சனை ஏற்பட்டுள்ளதாகவும், பிரச்சனையை சரிபடுத்த பொறியாளர்கள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், Crowd – Strike நிறுவனம் தெரிவித்துள்ளது. மத்திய தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சகம், பிரச்சனை குறித்து, மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தை தொடர்பு கொண்டுள்ளதாக, இத்துறையின் அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். தேசிய தகவலியல் மையத்தின் இணைய வலைப் பின்னல், பாதிக்கபடவில்லை என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

------------------------------

குவாத்ரா (5)

முன்னாள் வெளியுறவுச் செயலர் திரு. வினய் மோகன் குவாத்ரா, அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கான இந்திய தூதராக நியமிக்கப் பட்டுள்ளார். அவர் இப்பொறுப்பை விரைவில் ஏற்பார் என எதிர்பார்க்கப் படுகிறது. அமெரிக்காவிற்கான இந்திய தூதர் பதவியில் இருந்து, திரு. தரண்ஜீத் சிங் சந்து ஓய்வு பெற்றதில் இருந்து, இப்பதவி காலியாக உள்ளது.

------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

வரவிருக்கும் மன் கீ பாத் நிகழ்ச்சிக்கு பொது மக்களிடம் இருந்து பல்வேறு உள்ளீடுகள் பெறப்பட்டு வருவது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

விவசாயத்தில், ரசாயன உரங்களின் பயன்பாடு இன்றியே, மகசூலை அதிகரிக்க முடியும் என்று, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.

முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில் முக்கிய உந்து சக்திகளில் ஒன்றாக விளையாட்டுத் துறை திகழும் என்று, மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

தமிழகத்தில் ரயில்வே மற்றும் விமான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த, மத்திய அரசு, 6 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கி இருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.